**சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**

**சைவநெறி - தரம் 02 / மூன்றாந் தவணை – முதல் வாரம்**

**தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி**

## 6.0 இறையடியார்கள்

- நாயன்மார்களதும் அருளாளர்களதும் வாழ்வினை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகுவார்.




1). திருஞானசம்பந்தர் பொற்றாளம் பெற்ற கதையை முழுமையாக மெய்ப் பொருளுடன் எடுத்துக் கூறுக. ( பெற்றோர் ) அவதானமாக செவிமடுக்கவும், இரசனையுடன் கேட்கவும் வழிப்படுத்துக. ( சைவநெறி பாடநூல் )

2). இக்கதையில் வரும் பாத்திரங்களை ஏற்று அதுபோலவே பேசவும் நடித்துக் காட்டவும் வழிப்படுத்துக.

3). இறைவனின் கருணையை எடுத்துக் காட்டும் படிப்பினை உட்பட முழுமையாக கடவுள் நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாக இக்கதையை பிள்ளை கூற வழிப்படுத்துக.

4). கீழ்வரும் வினாக்களுக்கு விடை கூறவும் வழிப்படுத்துக.

i). திருஞானசம்பந்தர் சென்ற கோயில் எது?

ii). அங்கு அவர் பாடிய பதிகம் யாது?

iii). தமது திருக்கையினால் யாது செய்தார்?

iv). அதைக் கண்ட சிவபெருமான் யாது செய்தார்?

v). எப்படியான பொற்றளம் சம்பந்தருக்கு கிடைத்தது?

vi). திருஞானசம்பந்தர் எவ்வாறு இறைவன் இறைவியை வணங்கினார்?

vii). அதன் பின்பு எவ்வாறு பதிகம் பாடினார்?

viii). சம்பந்தர் பாடிய தேவாரத்தை தினமும் பாடுக, மனனம் செய்ய வழிப்படுத்துக.

**பிறருக்கு உதவ வேண்டும் என்ற மனப்பாங்கை ஏற்படுத்துக.**